# பத்திரிக்கை செய்தி

## பாகப்பிரிவினை பத்திரத்தினை பதிவு செய்துதர ரூ.20,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய பொறுப்பு சார்பதிவாளார் மற்றும் தனி நபர் கைது

புகார்தாரர் திரு.மலைராஜா, உசிலம்பட்டி, மதுரை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் பூர்வீக சொத்தினை பாகப்பிரிவினை செய்ய உசிலம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ஜியாவுதின், உதவியாளர், கம்பம் சார் பதிவாளர் அலுவலகம், தேனி மாவட்டம், சார்பதிவாளர், உசிலம்பட்டி (பொறுப்பு), மதுரை மாவட்டம் தனக்கு ரூ.20,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மதுரை மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 28.01.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஜியாவுதின், உதவியாளர், கம்பம் சார் பதிவாளர் அலுவலகம், தேனி மாவட்டம், சார்பதிவாளர், உசிலம்பட்டி (பொறுப்பு), மதுரை மாவட்டம் அவர்களின் உத்தரவின்பேரில் திரு.எடிசன், தனிநபர் லஞ்ச பணம் ரூ.20,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.